**செய்தி வெளியீடு எண்: 128** **நாள்: 21.02.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.2.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கிடாரங்கொண்டான் கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்பு கிடங்குகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், வேலூர், நாகப்பட்டினம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 15 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 13 சேமிப்பு கிடங்குகளை திறந்து வைத்தார்கள்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களை சேமித்து வைத்திடும் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 1.8.2014 அன்று சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில் புதிதாக கிடங்குகள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கிடாரங்கொண்டான் கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்பு கிடங்குகளை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், குகையநல்லூரில் 4 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 1500 மெட்ரிக் டன் கொள்ளளவில் 4 சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 1 சேமிப்புக் கிடங்கு, என மொத்தம் 7000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 சேமிப்புக் கிடங்குகள்; திருப்பத்தூர் வட்டம்,

குனிச்சி கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள்; ஆற்காடு வட்டம், மேல்நத்தம்பாக்கம் கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள்;

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள்; ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அத்தாணி கிராமத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவில், மொத்தம் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள்;

என மொத்தம் 18 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 சேமிப்புக் கிடங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மு. சுதா தேவி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.2.2018**